நெருக்கடியை வெல்வதற்கான

# துரித அணுகுமுறை

தேசிய மக்கள் சக்தி

நெருக்கடியை வெல்வதற்கான

# துரித அணுகுமுறை

தேசிய மக்கள் சக்தி

சுதந்திரத்திற்குப் பின்னர் கடந்துசென்ற பல தசாப்தங்களில் பல்வேறு அரசாங்கங்கள் கடைப்பிடித்த தவறான பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் அதன் பேரில் கட்டியெழுப்பப்பட்ட சமூக அரசியல் உபாய மார்க்கங்கள் படிப்படியாக நிலைநாட்டப்பட்டுள்ள ஊழல்மிக்க அரசியலால் எமது நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்துள்ள சமூக அழிவினை விளங்கிக்கொள்ள பெருந்தொகையான புள்ளிவிபரங்களும் ஆலாபனைகளும் அவசியமற்றது. ஒவ்வொரு 24 மணித்தியாலங்களிலும் அதிகரிக்கக்கூடிய உணவு உள்ளிட்ட ஏனைய அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அவற்றைக் கொள்வனவு செய்ய இடம்விட்டு இடத்திற்கு அலைந்து திரிகின்ற பொதுமக்களும் எமது நாட்டின் பொருளாதார நெருக்கடியின் பாரதூரத்தன்மைக்கு சான்று பகர்கின்றார்கள். அந்தப் பாரதூரத்தன்மையை விளங்கிக்கொள்ள வேகமாக நலிவடைந்து வருகின்ற வெளிநாட்டு ஒதுக்கங்களின் அளவு அல்லது பில்லியன் கணக்கான ரூபாய்களாக அமைந்துவிட்ட வரவு செலவுப் பற்றாக்குறை அல்லது ரில்லியன் கணக்கான ரூபாய்களாக அமைந்துவிட்ட கடன்கள் பற்றி அறிந்துகொள்வது அத்தியாவசியமன்று.

முதலாவது ஆண்டுக்காக பிள்ளையைச் சேர்த்துக் கொள்வதற்காக அரசியல்வாதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் பின்னால் செல்கின்ற பெற்றோர்களும் பாடசாலைகளுக்கு மேலதிகமாக ரியூஷன் வகுப்புகளில் அடைபட்டு பயில்கின்ற மாணவர்களும் தகைமைகளைப் பெற்றாலும் உயர் கல்விக்கான வாய்ப்பினைப் பெறாத உயர்தரத்தில் சித்தியடைந்த பிள்ளைகளும் 13 வருடகால பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்யாமல் இடைநடுவில் நின்றுவிடுகின்ற பிள்ளைகளும் எது கல்வியின் நெருக்கடியையே எமக்கு எடுத்தியம்புகிறார்கள்.

இலவச சுகாதாரம் பற்றிப் பேசுகின்ற ஒரு நாட்டில் தமது வருமானத்தில் 50% ஐ விட பிரத்தியேக சுகாதாரத்திற்காக செலவிட நேர்கின்றமையே எமது நாட்டின் சுகாதாரக் கொள்கையினதும் அதன் அமுலாக்கத்தினதும் சிக்கலை எமக்கு சுட்டிக்காட்டுகின்றது. முதியோருக்கான கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள பல மணித்தியாலங்களாக வரிசையில் நிற்கின்ற தாய்மார்களையும்

தகப்பன்மார்களையும் போன்றே நடுவீதியில் கைவிட்டுச் செல்லப்படுகின்ற வயதுமுதிர்ந்த முதியோர்களும் நாங்கள் எதிர்நோக்குகின்ற சமூக அழிவின் நீளத்தையும் அகலத்தையுமே எமக்கு எடுத்துரைக்கிறார்கள். நாளுக்கு நாள் பொலீசிலும் வைத்தியசாலைகளிலிலும் பதிவாகின்ற வீட்டு வன்முறைச் சம்பவங்களிலிருந்து எமது பொதுவான வாழ்க்கை எவ்வளவு அபாயநிலையில் உள்ளதென்பதையே எமக்கு சுட்டிக்காட்டுகின்றது.

மேலதிகமாக கற்பதற்கான வாய்ப்பு, உயிர்வாழ்வதற்காக கல்விக்கேற்ற தொழிலொன்றை தேடிக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்று எவ்விதத்திலேனும் இந்நாட்டிலிருந்து வெளியேற பாஸ்போர்ட் வரிசையில் நிற்கின்ற இளைஞர்கள் அவர்களின் ஏமாற்றத்தைப்போன்றே எமது எதிர்காலத்தின் தலைவிதியின் பயங்கரமான தன்மையையே சுட்டிக்காட்டுகிறார்கள். நாளுக்குநாள் தீவிரமடைகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் சிக்கல்களுக்கு முறையான தீர்வுகளின்றிப் போனமையால் சீரழிகின்ற தொழில்முயற்சிகளும் கடன்மேட்டில் நசுங்கிவிட்ட அந்த தொழில்முயற்சியாளர்களும் பொருளாதாரக் கட்டமைப்பின் சீரழிவினையே எமக்கு எடுத்தியம்புகிறார்கள்.

வேறுநாட்களில் காணக் கேட்கக் கிடைக்காத அளவிலான நிலச்சரிவுகள் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஊடாக இழக்கின்ற மனித உயிர்கள் மற்றும் ஆதனங்கள் மூலமாக அபிவிருத்தியின் பெயரால் முன்னெடுத்து வருகின்ற சுற்றாடல் அழிவின் பெறுபேறுகள் எமக்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

நடப்பு அரசாங்கம் இந்த அனைத்து நெருக்கடிகளுக்கும் கொரோனாவைக் காரணம் காட்டினாலும் எமது சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புகளின் பலவீனங்களேயன்றி பெருந்தொற்றினால் புதிதாக தோன்றிய நெருக்கடிகள் அல்லவென்பதையே எமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. இயற்கை அல்லது அவசர நெருக்கடிகள்/ அனர்த்தங்களைத் தாங்கிக்கொள்ள முடியாத பொருளாதாரமும் சமூகமும் எமது பொருளாதார மற்றும் சமூக கொள்கைகளினதும் உபாய மார்க்கங்களினதும் தர்க்கரீதியான பெறுபேறு என்றவகையிலேயே எமக்கு மரபுரிமையாகி உள்ளது.

நாங்கள் மாத்திரமன்றி முழு உலகுமே இந்த நிலைமையை அனுபவித்து வருகின்றது. உலகின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளபோதிலும் அதற்கு இணையாக ஏற்றத்தாழ்வும் வளர்ச்சியடைந்துள்ளது. பூமியால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு



**முதியோருக்கான கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள பல மணித்தியாலங்களாக வரிசையில் நிற்கின்ற தாய்மார்களையும் தகப்பன்மார்களையும் போன்றே நடுவீதியில் கைவிடப்பட்டுச் செல்லப்படுகின்ற வயதுமுதிர்ந்த முதியோர்களும் நாங்கள் எதிர்நோக்குகின்ற சமூக அழிவின் நீளத்தையும் அகலத்தையுமே எமக்கு எடுத்துரைக்கிறார்கள்**

அதன் சுற்றாடல் அழிவடைந்துள்ளது. அதனால் முழு உலகுமே வேறு திசையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. மிகவும் நியாயமான, கருணைகொண்ட மற்றும் மனிதாபிமானம்கொண்ட உலகத்தை நாங்கள் கட்டியெழுப்பிக்கொள்ள வேண்டுமென பெரும்பாலானோர் தற்போது நம்புகிறார்கள். இலகுவான பணியாக அமையாவிட்டாலும் அந்த மாற்றத்தை நோக்கி ஒருசில பாதச்சுவடுகளேனும் பதிக்கப்படல் வேண்டுமென நாங்கள் நம்புகிறோம். உலகம் பூராவிலும் அத்தகைய நம்பிக்கையின் புத்துணர்ச்சி உருவாகி வருகின்றது.

பின்வாங்க இதைவிட ஓர் அங்குலமோ அல்லது பொறுமையுடன் இருக்க இதைவிட ஒரு தருணமோ எமக்கு எஞ்சியதாக இல்லை. தொடர்ந்தும் இதே பாதையில் பயணிப்பதால் ஆபத்தில் தள்ளப்படுவது உங்களினதும் எனதும் உயிர்கள் மாத்திரமன்றி எமது பிள்ளைகளை உள்ளிட்ட பல வருங்காலச் சந்ததிகளின் தலைவிதியாகும். இத்தருணத்தில் எமது மனச்சாட்சியைத் தட்டியெழுப்பி நாங்கள் கேட்க வேண்டியது, இந்த துர்ப்பாக்கியமான தலைவிதியை எதிர்கால தலைமுறையினருக்கு அனுபவிக்க இடமளிக்காமல் அதனை மாற்றியமைப்பதற்காக இந்த தவறான சமூக, பொருளாதார கொள்கைகளின் ஆழத்துடன் விரிவான மாற்றமொன்றுக்காக நாங்கள் தோற்றவேண்டுமென்பதும் அந்த மாற்றத்தை அடையக்கூடிய அரசியல் இயக்கமொன்றுடன் ஒன்றிணைய வேண்டுமென்பதையல்லவா?

தேசிய மக்கள் சக்தி என்றவகையில் அந்த ஆழமானதும் விரிவானதுமான சமூக பொருளாதார மாற்றத்தை அடைவதற்கு அவசியமான அத்திவாரத்திற்கான அடிப்படை கருத்துக்களையும் துரித முன்மொழிவுகள் சிலவற்றையும் முன்வைக்கிறோம். அந்த முன்மொழிவுகளை மேலும் விரிவாக்கி அவற்றை யதார்த்தமாக்கிக் கொள்வதற்காக எம்மோடு கைகோர்த்துக் கொள்ளுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.



**தொடர்ந்தும் இதே பாதையில் பயணிபதால் ஆபத்தில் தள்ளப்படுவது உங்களினதும் எனதும் உயிர்கள் மாத்திரமன்றி எமது பிள்ளைகளை உள்ளிட்ட பல வருங்காலச் சந்ததிகளின் தலைவிதியாகும்**

# மன்றாடுகின்ற பொருளாதாரத்திற்குப் பதிலாக ஈட்டுகின்ற பொருளாதாரமொன்று

நிகழ்கால பொருளாதார நெருக்கடி பிறந்திட எந்தவிதமான விசாரித்தறிதலுமின்றி எமது நாட்டின் அரசாங்கங்கள் கடைப்பிடித்த தவறான பொருளாதார மூலோபாயங்களும் ஊழல், மோசடிகள் மற்றும் விரயமும் காரணமாக அமைந்துள்ளதென்பது தெட்டத்தெளிவானதாகும்.

1977 இல் அறிமுகஞ்செய்த "திறந்த பொருளாதாரக் கொள்கை" சமூகம்மீது கரிசனை கொள்ளாமல் இலாபத்திற்கு மாத்திரம் முதன்மைத்தானம் வழங்குகின்ற அழிவுமிக்க ஒரு கொள்கையாகும். கொவிட் பெருந்தொற்றின் மத்தியில்கூட வரையறுக்கப்பட்ட குழுவினர் அதிக இலாபம் பெற, கொமிஸ் பெற்றுக்கொள்ள, மோசடியிலும் ஊழலிலும் ஈடுபட செயலாற்றுவதன் ஊடாக அது நிருபிக்கப்படுகின்றது. இந்த அழிவுமிக்க பொருளாதாரக் கொள்கையை அமுலாக்குவதற்காக ஒருசிலரின் கைகளை மையமாகக்கொண்ட அரசியல் அதிகாரப் பொறியமைப்பும் அதேவேளையிலேயே நிர்மாணிக்கப்பட்டது. சனநாயகத்திற்கு எதிரான இந்தப் பொருளாதார முறையானது எமது நாட்டுக்கு மாத்திரம் தனித்துவமானதற்ற, அப்போது நிலவிய உலக அரசியல் பொருளாதாரப் போக்காகவும் அமைந்ததோடு இலங்கையை ஆட்சிசெய்த ஒவ்வோர் அரசாங்கமும் ஏறக்குறைய அதனை அமுலாக்கின.

மேற்படி பொருளாதார மறுசீரமைப்புகளால் இன்று மக்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார வசதியீனங்கள் நிர்மாணித்த கொடிய பொருளாதார நெருக்கடியின் அடிப்படை அத்திவாரம் இடப்படுவதே இடம்பெற்றது. அதாவது உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க முதன்மைத்தானம் வழங்குவதை விடுத்து நிதிச் சந்தையை விரிவாக்குதல், அரச நலனோம்புகை செலவுகளைக் குறைத்தல், மானியங்களை வெட்டிவிடல், சந்தை ஏகபோக உரிமையை உருவாக்குதல், கவர்ச்சிகரமான மற்றும் முறைசாராக் கடன்களைப் பெற்றுக்கொள்ளல், பொது ஆதனங்கள் மற்றும் பகிரங்கத் தொழில் முயற்சிகளை பல்வேறு பெயர்களில் ஆட்களுக்கும் கம்பெனிகளுக்கும் கைளித்தல் இந்தக் கொள்கையின் பிரதான பண்புகளாகும். படிப்படியாக விரிவடைந்த இந்தக் கொள்கை நவலிபரல்வாதம் எனும் பெயரில் பிற்காலத்தில் நாமம் சூட்டப்பட்டது. அதன் செயற்பாடு உலகமயமாக்கல் எனும் பெயரில் தனது ஆதிக்கத்தைப் பரப்ப இடமளித்து பண்டங்களின் உற்பத்தியிலிருந்து விலகிச் சென்ற பொருளாதாரக் குமிழ்களை உருவாக்குகின்ற செயற்கையான நிதிச்சந்தை உருவாக்கப்பட்டது.

அதன் மிகவும் கொடிய பிரதிவிளைவான உலகளாவிய நிதிசார் நெருக்கடிக்கு 2006 இல் ஐக்கிய அமெரிக்காவுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. அந்த நெருக்கடி அரச தலையீடு மூலமாக தற்காலிகமாக தணிக்கப்பட்டபோதிலும் இன்னமும் இடைக்கிடையே தோன்றி இன்றளவில் உலக பொருளாதார வீழ்ச்சிநிலை வரை பயணித்துக் கொண்டிருக்கின்றது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் விரிவடைந்துள்ள விதத்தை பகுப்பாய்வதன் மூலமாக முறையான திட்டமொன்றின்கீழ் சுற்றாடல் நேயமுள்ள, மக்களுக்குச் சாதகமான சமூகமொன்றை, வனப்புமிக்க வாழ்க்கையை பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் பொருளாதாரம் நெறிப்படுத்தப்படவில்லை என்பதும் உலக பொருளாதாரத்தில் கணிசமான ஒரு பங்கினை பெற்றுக்கொள்வதில் வெற்றியடைவதற்குப் பதிலாக குறைந்தபட்சம் முற்காலத்தில் அடைந்திருந்த இடத்தைக்கூட காப்பாற்றிக்கொள்ளத் தவறியுள்ளமையும் புலனாகின்றது. பொருளாதார அபிவிருத்தி உபாயமுறையின் பேரில் கடன் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக தமது குறுகிய அரசியல் தேவைப்பாடுகள் மற்றும் ஆட்சியாளர்களின் தனிப்பட்ட பொருளாதாரரீதியான அநுகூலங்களின்பேரில் அந்தந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட கடனெடுத்தல்கள் மற்றும் மட்டற்ற ஊழல் மோசடிகள் காரணமாக இன்றளவில் வெளிநாட்டுக் கடன் செலுத்தும் ஆற்றலில் சர்வதேச தரப்படுத்தல்களுக்கிணங்க அரசினை வங்குரோத்து நிலையடைகின்ற எல்லைக்கு அருகில் இழுத்துப்போட்டு, கடனைச் செலுத்த போதியளவிலான அந்நிய செலாவணியின்றி நாடு கடன் விஷச் சக்கரத்திற்கு இரையாக மாற்றப்பட்டுள்ளது.



**உலக பொருளாதாரத்தில் கணிசமான ஒரு பங்கினை பெற்றுக்கொள்வதில் வெற்றியடைவதற்குப் பதிலாக குறைந்தபட்சம் முற்காலத்தில் அடைந்திருந்த இடத்தைக்கூட காப்பாற்றிக்கொள்ளத் தவறியுள்ளமையும் புலனாகின்றது**



# எங்களின் அணுகுமுறை

நாங்கள் கடைப்பிடிப்பது எத்தகைய பண்டங்கள் மற்றும் சேவைகள் உற்பத்தி செய்யப்படல் வேண்டும், எத்தகைய உற்பத்தி முறையியல்கள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும், எந்த வகையிலான தொழில்நுட்பம் அதற்காக ஈடுபடுத்தப்படல் வேண்டும், எங்களுக்குச் சொந்தமான மானிட மற்றும் பௌதீக வளங்கள் எவ்விதத்தில் பயன்படுத்தப்படல் வேண்டும், வெளிநாட்டு வர்த்தகத்தின் கட்டமைப்பு எவ்விதமாக வகுக்கப்படல் வேண்டும், உற்பத்திச் செயற்பாங்கின் நன்மைகள் எவ்வாறு மக்களுக்கிடையில் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும் ஆகிய விடயங்களை உள்ளிட்ட பெறுமதிகளைச் சேர்க்கின்ற பொருளாதார அணுகுமுறையாக மாத்திரம் அமையமாட்டாதென்பதோடு மனிதாபிமானம், சமூக நீதி, சுற்றாடல் நேயம், பொருளாதார உறுதிநிலை, இலங்கையின் நாகரிகம் மற்றும் கலாசாரம், மக்களின் பங்கேற்பு, உயர்வான வளப் பயன்பாடும் பொருளாதார சனநாயகமும் ஆகிய அனைத்தையும் ஒரேநேரத்தில் கவனத்திற் கொள்கின்ற புதிய அணுகுமுறை என்பதை முதலில் வலியுறுத்தவேண்டும்.

- ☐ **இலங்கையின் சாத்தியவளத்தின் பேரிலான குறுங்கால, மத்தியகால மற்றும் நீண்டகாலரீதியில் அடைய எதிர்பார்க்கின்ற பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை உள்ளிட்ட தேசிய திட்டம்**
- ☐ **மேற்படி திட்டத்தை அமுலாக்குவதற்கு அவசியமான மனித வளத்தை தயார்செய்தல்**
- ☐ **அரச மற்றும் தனியார் பிரிவு மூலமாக ஒவ்வொரு பிரசைக்கும் நாட்டைக் கட்டியெழுப்புகின்ற கூட்டுப் பணிக்காக தோள்கொடுக்க வாய்ப்பு வழங்குதல்**
- ☐ **உற்பத்திச் செயற்பாங்கில் உணவுகளின் அளவுசார்தன்மைக்கும் பாதுகாப்பிற்கும் முன்னுரிமை வழங்குதல்**
- ☐ **உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்களின் இறக்குமதியை தைரியமிழக்கச் செய்வித்தல்**
- ☐ **உற்பத்திகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பம், புதிய முறையியல்கள், படைக்குந்திறன் மற்றும் புத்துருவாக்கங்களை ஒவ்வொரு துறைக்கும் அறிமுகஞ்செய்தல்**
- ☐ **பிரதான திட்ட இலக்குகளை அடைவதற்கு அவசியமான பொருளாதார விருத்தியை பிறப்பிக்கின்ற மற்றும் பல்வகை**



**அரச மற்றும் தனியார் பிரிவு மூலமாக ஒவ்வொரு பிரசைக்கும் நாட்டைக் கட்டியெழுப்புகின்ற கூட்டுப் பணிக்காக தோள்கொடுக்க வாய்ப்பு வழங்குதல்**

பெறுபேறுகளை அளிக்கின்ற கைத்தொழில்களையும் புதிய தொழில்நுட்பங்களையும்கொண்ட வெளிநாட்டு முதலீடுகளை அழைப்பித்தல்

- ☐ அடிப்படை உற்பத்திகளை மூலப்பொருட்களாக மாத்திரம் ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக உலகச் சந்தையில் உருவாகின்ற கேள்விப்போக்குகளை கவனத்திற்கொண்டு பெறுமதி சேர்த்த பண்டங்களாக அவற்றை ஏற்றுமதி செய்வதும், உலகளாவிய வழங்கல் சங்கிலித் தொடருடன் இணைந்து அந்நிய செலாவணியை அதிகளவில் பிறப்பிக்கக்கூடிய பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதை ஊக்குவித்தல்
- ☐ எமது நாகரிகத்துடன் இயல்பாகவே பின்னிப்பிணைந்துள்ள விவசாயத்தையும் மீன்பிடித் தொழிலையும் வேலைத்தலத்தில் இருந்து சர்வதேச சந்தைவரை வியாபித்த வலையமைப்புகொண்ட முறையியல் ஊடாக நவீனமயப்படுத்தலுக்கு உள்ளாக்குதல்
- ☐ உலக பரிமாணத்தில் இடம்பெறுகின்ற காலநிலை மாற்றங்களின் பாதகமான பெறுபேறுகளை நீக்குவதற்கான கருத்திட்டங்களுக்காக நீண்டகால பசுமைப் பிணைமுறிகளை விநியோகிப்பதன் ஊடாக நிதிகளை உருவாக்கிக்கொள்ளல்
- ☐ தொழில்நுட்பத் துறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பினையும் அந்நிய செலாவணி ஈட்டல்களை விருத்திசெய்து கொள்வதற்காகவும் துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களினதும் தொழில்வாண்மையாளர்களினதும் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளல், தொழில்நுட்ப போட்டித்தன்மை குறிகாட்டி மற்றும் பிரசைகளினதும் அரசினதும் டிஜிட்டல் எழுத்தறிவினை உயர்த்துதல்
- ☐ இலங்கையின் இயற்கையான இடஅமைவினை பாவனைக்கு எடுத்து அதனை பிரதான கப்பற்றுறை சேவை வழங்குகின்ற நடுநிலையமாக மாற்றுதல்
- ☐ காலநிலை, புவியியல் மற்றும் கலாசார பன்வகைமையை அடிப்படையாகக்கொண்ட சுற்றுலாக் கைத்தொழிலை உருவாக்குதல்



இலங்கையின் இயற்கையான இடஅமைவினை பாவனைக்கு எடுத்து அதனை பிரதான கப்பற்றுறை சேவை வழங்குகின்ற நடுநிலையமாக மாற்றுதல்

# அரச படுகடன்

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கமொன்றின்கீழ் வெளிநாட்டுக் கடன் பிரச்சினையை எவ்வாறு தீர்த்துவைப்பது என்பது பற்றிய விபரமான ஆவணமொன்று தனிவேறாக சமர்ப்பிக்கப்படுவதோடு வெளிநாட்டு ஒதுக்கத்தை விருத்திசெய்து கடன் மீளச்செலுத்தும் ஆற்றலை அதிகரிப்பதற்கான பொழிப்பாக தயாரிக்கப்பட்ட வழிமுறைகளை மாத்திரம் பின்வருமாறு குறிப்பிடுகிறோம்.

- ☐ **இலங்கையைக் கடன்பொறியிக்குள் சிக்கவைத்த தரப்பினர்களுக்கு பொறுப்பிலிருந்து விடுபட இடமளிக்கப்பட மாட்டாதென்பதோடு சிறப்பறிஞர்களை உள்ளடக்கிய ஆணைக்குழுவொன்று மூலமாக தற்போது செலுத்துவதற்குள்ள அனைத்து வெளிநாட்டுக் கடன்கள் பற்றியும் முழுமையான புலனாய்வினையும் கணக்காய்வினையும் மேற்கொள்ளல்**
- ☐ **எதிர்வரும் ஐந்து வருடங்களில் அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற விதத்தைக் காட்டுகின்ற முறையான திட்டமொன்றை வகுத்தல்**
- ☐ **கடன் மீளச்செலுத்துதலை மறுசீரமைத்தலும் பிற சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கடன் வழங்கிய அந்தந்த தரப்பினர்களுடன் இராஜதந்திர ரீதியாக செயலாற்றுதலும்**
- ☐ **வெளிநாடு சென்றுள்ள இலங்கை உழைப்பாளிகளுக்கும் செல்வந்தர்களுக்கும் அதிகளவில் இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை அனுப்பிவைக்கவும் முதலீடு செய்யவும் அவசியமான நம்பகத்தன்மைமிக்கதும் வெளிப்படைத்தன்மை கொண்டதுமான புதிய தொழில்முயற்சி செயற்பாடுகளை இலங்கையில் ஆரம்பிக்க வாய்ப்பு வழங்குதல்**





**கடன் மீளச்செலுத்துதலை மறுசீரமைத்தலும் பிற சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கடன் வழங்கிய அந்தந்த தரப்பினர்களுடன் இராஜதந்திர ரீதியாக செயலாற்றுதலும்**

# உற்பத்தி நிறுவனக் கட்டமைப்புகள்

பல்வேறு கட்டமைப்புகளின்கீழ் தற்போது இடம்பெறுகின்ற பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திச் செயற்பாங்குகளில் ஒவ்வொருவரும் வேலைசெய்வது தனியான இலக்குகள் மற்றும் நோக்கங்களின் பேரில் என்பதால் தொழில்தருனர் மற்றும் தொழில்பெறுனருக்கிடையில் அல்லது வேறு தரப்பினர்க்கிடையில் பலவிதமான முரண்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கமொன்றின்கீழ் மிகவும் சனநாயகரீதியாக உற்பத்திகளை மேற்கொள்ளவும் பகிர்ந்தளிக்கவும் ஏதுவானவகையில் அனைத்து தரப்பினரதும் விழிப்புணர்வு மற்றும் இணக்கப்பாட்டின் பேரில் தீர்மானம் மேற்கொள்ளவும், உற்பத்திச் செயற்பாட்டிளை உயர் வினைத்திறனும் உற்பத்திறனும் கொண்டதாக முரண்பாடுகளின்றி மேற்கொள்ளவும் அவசியமான சுற்றுச்சூழல் உருவாக்கிக் கொடுக்கப்படும். அதன் மூலமாக தேசிய உற்பத்தியினதும் கைத்தொழிலின் இயல்பினதும் பேரில் உலகப் போக்குகள் என்றவகையில் தோன்றியுள்ள கூட்டுப் பொறுப்பினை வகித்து சனநாயகரீதியான தீர்மானங்களை மேற்கொள்கின்ற பல்வேறு நிறுவனக் கட்டமைப்புகள் ஊக்குவிக்கப்படும்.

- ☐ **சந்தையில் தோன்றக்கூடிய தனியுரிமைகள் மற்றும் தன்னலக்குழுக்களை தடுத்தலும் புதிய உற்பத்திக் கட்டமைப்புகளை அறிமுகஞ் செய்தலும்**
- ☐ **சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாய, கால்நடை வளங்கள் மற்றும் மீன்பிடித் துறைக்குள் உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான வலையமைப்புசார்ந்த கட்டமைப்புகளை அறிமுகஞ்செய்தல்**





**தேசிய மக்கள் சக்தி அரசாங்கமொன்றின்கீழ் மிகவும் சனநாயகரீதியாக உற்பத்திகளை மேற்கொள்ளவும் பகிர்ந்தளிக்கவும் ஏதுவானவகையில் அனைத்து தரப்பினரதும் விழிப்புணர்வு மற்றும் இணக்கப்பாட்டின் பேரில் தீர்மானம் எடுத்தல்**

# மோசடிகள், ஊழல்கள் மற்றும் விரயத்தை ஒழித்துக்கட்டுதல்

நவலிபரல் பொருளாதாரம் என்பது மோசடி, ஊழல் மற்றும் திருட்டினை திருமணம் செய்துகொண்ட அரசியல் பொருளாதார முறையாகும். கண்கூடாகவே பட்டப்பகலில் பொதுமக்களின் ஆதனங்களை கொள்ளையடிக்கின்ற எவரையும் சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை வழங்க முடியாதிருப்பதால் இது மிகவும் தெளிவாகின்றது.

- ☐ **பொது ஆதனங்களை சூறையாடிய கொள்ளைக்காரர்கள் முறையான நீதிமன்ற செயற்பாங்கின் ஊடாக தண்டனைக்கு இலக்காக்கப்பட்டு அந்த ஆதனங்களை பொதுச் சேவைகளை முன்னேற்றுவதற்காக பாவித்தல்**
- ☐ **அரசாங்கத்தின் பொருளாதார தொழிற்பாட்டுச் செயற்பாங்கினை படிப்படியாக இ - கட்டுப்பாடுவரை மாற்றியமைத்தல்.**
- ☐ **மோசடி ஊழலை ஒழித்துக்கட்டுதலும் நிதிசார் ஒழுகலாற்றின் பாதுகாப்பினை பலப்படுத்த அவசியமான தொழில்நுட்பத்தை அறிமுகஞ்செய்தலும்**

# சமூகப் பாதுகாப்பு

எமது சமூகத்தில் வசிக்கின்ற அனைத்து ஆட்களுக்கும் சமுதாயங்களுக்கும் பெருமையுடன் வாழ்வதற்கு அவசியமான அடிப்படை வசதிகள் நம்பகத்தன்மைமிக்கதாகவும் நியாயமானதாகவும் கிடைக்கவேண்டியுள்ளது. பொதுவாக அனைத்துப் பிரசைகளுக்கும் குறிப்பாக பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள், வலதுகுறைந்தவர்களுக்கும் சாதகமான வாழ்க்கையை மேற்கொள்ள அவசியமான சமூக, பொருளாதார சுற்றுச்சூழலை ஏற்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும். அந்தப் பணியின்போது சமூகப் பாதுகாப்பினை ஒரு வர்த்தகப் பண்டமாக கருதாமல் தேசிய திட்டமொன்றின் அடிப்படையில் தனியார்த் துறையையும் பங்கேற்கச் செய்வித்து செயலாற்ற அரசாங்கம் முன்நின்று செயலாற்றும்.




**பொதுவாக அனைத்துப் பிரசைகளுக்கும் குறிப்பாக பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள், வலதுகுறைந்தவர்களுக்கும் சாதகமான வாழ்க்கையை மேற்கொள்ள அவசியமான சமூக, பொருளாதார சுற்றுச்சூழலை ஏற்படுத்தல்**

# கல்வி

இலங்கையின் சமூக அசைவினை மேம்படுத்துவதில் கல்வி மிகமுக்கியமான செயற்பொறுப்பினை ஆற்றுகின்றது. அதைப்போலவே சனநாயக மற்றும் பன்மைத்துவ சமூகமொன்றுக்கு அவசியமான பெறுமதிகொண்ட ஆளொருவரை தரமான கல்வி மூலமாகவே உருவாக்க முடியும். அதனாலலேயே எமக்கு இலவசக் கல்வி முக்கியமானதாக அமைகின்றது. அதைப்போலவே பொருளாதாரத்தையும் மனிதவள அபிவிருத்தியையும் நோக்கமாகக்கொண்டு தரமான கல்வியை பேணிவருவதற்காக அரசாங்கத்தின் செயற்பொறுப்பு மிகவும் முக்கியமானதாகும்.

- ☐ **ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தியில் இருந்து உயர்கல்வி வரை இலவசக் கல்வி**
- ☐ **ஒவ்வோர் ஆளுக்கும் திறமை மற்றும் ஆற்றலின்பேரில் கல்வியில் பிரவேசிப்பதற்கான நியாயமான வாய்ப்பு**
- ☐ **நிபுணத்துவ அறிவு மற்றும் சம்பந்தப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு கல்வியின் கட்டமைப்புரீதியான மாற்றமொன்று**
- ☐ **வர்த்தகப் பண்டமொன்றாக மாறியுள்ள பிரத்தியேகக் கல்வியின் தரத்தையும் அநீதியான கட்டணங்களையும் ஒழுங்குறுத்துவதற்கான நடவடிக்கைகள்**
- ☐ **அரச மற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்பின்நிலைக் கல்வியை ஒழுங்குறுத்துவதற்கான நடவடிக்கைகள்**
- ☐ **படிப்படியாகவும் திட்டமிட்டவகையிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 6% ஐ கல்விக்காக ஒதுக்குதல்**

**ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தியில் இருந்து உயர்கல்வி வரை இலவசக் கல்வி**







# சுகாதாரம்

உலக சுகாதார தாபனம் பொருள்கோடல் வழங்கியுள்ள விதத்தில் சுகாதாரம் என்பது நோய்நொடியின்றி இருப்பது மாத்திரமன்று. முழுமையான உடல், உள மற்றும் சமூக உடல்நலத்தைப் பெறுவதாகும். மக்களின் ஆரோக்கியம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலும் சமூக அபிவிருத்தியிலும் பங்களிக்கின்ற பிரதான காரணியாகும்.

- ☐ **அனைத்துப் பிரசைகளினதும் தனிப்பட்ட சுகாதாரத்தை அடிக்கடி கண்காணித்து அவசியமான சிகிச்சைகளின்பால் ஆற்றுப்படுத்துகின்ற சுகாதார முறைமையொன்று**
- ☐ **ஆண்-பெண் சமூகநிலை, வருமானம் அல்லது சமூக அந்தஸ்து, தொழிலின் தன்மை என்பவற்றின் பேரில் பாரபட்சம் காட்டாமல் அனைத்துப் பிரசைகளுக்கும் தரமான சுகாதார சேவையொன்று**
- ☐ **ஒரு குடும்ப அலகிற்கான தனிப்பட்ட சுகாதாரத்திற்காக வருமானத்திலிருந்து ஒதுக்குகின்ற சதவீதத்தை திட்டமிட்டவகையில் குறைப்பதற்கான வேலைத்திட்டம்**
- ☐ **சுகாதாரத்திற்காக மொத்த தேசிய உற்பத்தியில் குறைந்தபட்சம் *5%***
- ☐ **பிரசைகளின் சுகாதார ஆயுட்காலத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

**ஒரு குடும்ப அலகிற்கான தனிப்பட்ட சுகாதாரத்திற்காக வருமானத்திலிருந்து ஒதுக்குகின்ற சதவீதத்தை திட்டமிட்டவகையில் குறைப்பதற்கான வேலைத்திட்டம்**

# கலாசாரம், கலை மற்றும் பொழுதுபோக்கு

கலாசாரம் பொருளாதாரத்திலிருந்து சார்புரீதியான சுயாதீனத்தன்மை பொருந்திய அடவியாகும். அதேவேளையில் அது மறுபுறத்தில் மீண்டும் பொருளாதாரத்திலும் தாக்கமேற்படுத்துகின்றது. எனவே கலாசார மனிதனொருவனை உருவாக்கிக்கொள்ள அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு எனக் கருதுகிறோம். இந்த வலயம் பொதுமக்களால் அனுபவிக்க இயலாத ஒரு துறையாக இன்று மாறியுள்ளது. மிகவும் கடினமான வாழ்வாதாரப் போராட்டத்தில் களைப்படைந்துள்ள பொதுமக்களுக்கு கலை, இரசனை மற்றும் பொழுதுபோக்கிற்காக இடையீடுசெய்யவும், இரசனையை மேம்படுத்தவும் படைப்பாக்கத்தில் ஈடுபடவும் விரிவான களத்தை அமைத்துக் கொடுக்கும். சினிமா, நாடகம், நடனம், இசை, கவிதை மற்றும் நாவல், சிறுகதைகள், சித்திரங்கள், சிற்பக்கலை ஆகிய துறைகளில் படைப்பாளிகளுடன் கூட்டாகத் திட்டமிடுகின்ற வேலைத்திட்டமொன்றை அமுலாக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு குறைவின்றி வழங்கப்படும்.

**மிகவும் கடினமான வாழ்வாதாரப் போராட்டத்தில் களைப்படைந்துள்ள பொதுமக்களுக்கு கலை, இரசனை மற்றும் பொழுதுபோக்கிற்காக இடையீடுசெய்யவும், இரசனையை மேம்படுத்தவும் படைப்பாக்கத்தில் ஈடுபடவும் விரிவான களத்தை அமைத்துக் கொடுக்கும்**







## போக்குவரத்து

பயணிகள் எனும்போது பலவிதமான போக்குவரத்து அவசியப்பாடுகள் உள்ள பல்வேறு குழுக்களின் கூட்டாக அமைவதால் (ஆண் - பெண், முதியோர், சிறுவர் மற்றும் வலதுகுறைந்தவர்கள்) அந்தப் பன்வகைமைக்கு அமைவான தரமான போக்குவரத்துச் சேவையொன்றினை பேணிவர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- ☐ **சுற்றாடல் நேயமுள்ள வினைத்திறன்கொண்ட நம்பிக்கையான பாதுகாப்பான கௌரவமான பொதுப்போக்குவரத்து முறைமையொன்றை நோக்கி படிப்படியாக மாறுதல்**
- ☐ **ஒரு தசாப்தத்தில் மக்களின் போக்குவரத்து அவசியப்பாடுகளில் 80% ஐ பொதுப் போக்குவரத்துச் சேவை மூலமாக இயலுமானவகையில் பொதுப்போக்குவரத்தினை தரரீதியாகவும் அளவுசார்ரீதியாகவும் விருத்திசெய்தல்**
- ☐ **பல்வேறு போக்குவரத்து மாதிரிகளை (நடைபாதை, நிரல்கள், துவிச்சக்கரவண்டி, நீர்க்காவி முதலியவை) மேம்படுத்துதல்**

**ஒரு தசாப்தத்தில் மக்களின் போக்குவரத்து அவசியப்பாடுகளில் 80% ஐ பொதுப் போக்குவரத்துச் சேவை மூலமாக இயலுமானவகையில் பொதுப்போக்குவரத்தினை தரரீதியாகவும் அளவுசார்ரீதியாகவும் விருத்திசெய்தல்**

# பெண்கள்

நிகழ்கால இலங்கை அரசியல் சூழமைவில் தோன்றியுள்ள நெருக்கடியான நிலைமையின் மத்தியில் பெண்களைப் பாதிக்கின்ற சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் சிக்கல்களை இலங்கை அரசியல் உரையாடலின் மையமான கவனத்திற்கு ஆற்றுப்படுத்துவது எமது அடிப்படை நோக்கமாகும். சமூகத்தில் பெண்கள் பிரதான சமூக - பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் செயற்பாங்கிலிருந்து ஓரங்கட்டப்பட்டு நிலவுகின்றமை காரணமாக அவர்கள் அடிக்கடி அநீதிக்கு, அநியாயநிலைக்கு மற்றும் சமமற்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டு உதாசீனம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்த நிலைமை வீட்டில், சமூகத்திலும் மக்கள் மத்தியிலும், வேலைத்தலத்திலும், அரசியல் அடுக்கிலும் ஆகிய அனைத்து துறைகளிலும் பரந்து விரிந்துள்ளது. பெண்களின் வகிபாகம் விரிவடைந்துள்ளதாக மேலோட்டமாக பார்க்கும்போது தோன்றினாலும் அதன்மூலமாக பெண்கள்மீது தாங்கிக்கொள்ள முடியாத அழுத்தங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

- ☐ **உழைப்பு பெண்கள்மயமாகியமை மூலமாக ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தில் முதன்மை வருமானம் ஈட்டுபவர்களாக பெண்கள் மாறியுள்ளமையால் அபாயநேர்வுக்கு இலக்காகிய உழைப்பாளிகளாக மாறுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**
- ☐ **சமூகத்தினால் ஓரங்கட்டப்பட்ட சமூகப் பிரிவுகளிலும் பால்புதுமையினர், திருநர் சமுதாயத்தையும் பாதிக்கின்ற பாரதூரமான துன்புறுத்தல்களையும் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற நிலைமைகளையும் நாங்கள் நிராகரிக்கின்றோம். அனைவருக்கும் சுதந்திரமும் சமத்துவமும் உறுதிப்படுத்தப்பட்ட துன்புறுத்தல்களும் அழுத்தங்களுமின்றி வாழக்கூடிய சமூகத்திற்காக நாங்கள் பாடுபடுகிறோம்**
- ☐ **ஆண் - பெண் சமூகநிலை மற்றும் பால்நிலையின்பேரில் அநீதியான வகையிலும் சமத்துவமற்றவகையிலும் கவனிக்கின்ற சட்டங்களை மறுசீரமைத்தல்**
- ☐ **பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், பங்கேற்பு மற்றும் வகிபாகத்தை பெரும்போக்கில் சேர்த்தல்**

**ஆண்—பெண் சமூகநிலை மற்றும் பால்நிலையின்பேரில் அநீதியான வகையிலும் சமத்துவமற்றவகையிலும் கவனிக்கின்ற சட்டங்களை மறுசீரமைத்தல்**

- ☐ **தாபனஞ்சார் துன்புறுத்தல் கட்டமைப்புகளை உள்ளிட்ட அனைத்துவிதமான துன்புறுத்தல்களையும் எதிர்த்தல் மற்றும் இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களுக்கு எதிராக சட்டங்களை இற்றைப்படுத்துதல்**

- ☐ **கல்வி, மதங்கள், வெகுசன ஊடகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களால் மீள்உற்பத்தி செய்யப்பட்டு பேணி வரப்படுகின்ற ஆண்- பெண் சமூகநிலை தொடர்பான முற்கற்பிதங்களின் பாதகமான வடிவங்களை எதிர்த்தலும் மாற்றுக் கருத்தியல்களை கட்டியெழுப்புதலும் ஆண்களாலும் பெண்களாலும் சுமந்துகொண்டிருக்கின்ற பாதகமான மற்றும் மரபுவழி நம்பிக்கைகள், உளப்பாங்குகள் மற்றும் மூடநம்பிக்கைகளின் காவிகளை தடுக்க அவசியமான இடையீடுகளை மேற்கொள்ளலும்**





**கல்வி, மதங்கள், வெகுசன ஊடகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களால் மீள்உற்பத்தி செய்யப்பட்டு பேணி வரப்படுகின்ற ஆண்– பெண் சமூகநிலை தொடர்பான முற்கற்பிதங்களின் பாதகமான வடிவங்களை எதிர்த்தல்**

# சிறுவர்களும் இளைஞர்களும்

- ☐ சிறுவர் பாதுகாப்பிற்காக உள்ள நிறுவன முறைமைகள் அதாவது நீதிமன்றங்கள், நன்னடத்தை, சமூக சேவைகள், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு இடையிலான இணைப்பாக்கத்தை பலப்படுத்துதல்
- ☐ பலம்பொருந்திய சிறுவர் பாதுகாப்பு முறைமைக்கு அவசியமான கட்டமைப்புசார் மற்றும் சட்ட மறுசீரமைப்புகள்
- ☐ இளைஞர்கள் எதிர்பார்க்கின்ற நியாயமான மற்றும் சமத்துவத்தை மதிக்கின்ற சமூகமொன்றைக் கட்டியெழுப்ப அவசியமான அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களை அமுலாக்குகையில் இளைஞர்களின் பங்கேற்பினை முதன்மைப்படுத்துதல்



**பலம்பொருந்திய சிறுவர் பாதுகாப்பு முறைமைக்கு அவசியமான கட்டமைப்புசார் மற்றும் சட்ட மறுசீரமைப்புகள்**





## முதியோர்

எமது நாட்டு சனத்தொகையில் அதிகரித்து வருகின்ற முதிய சமுதாயத்தினர் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியுடனும் பயனுள்ளவகையிலும் வாழ அவசியமான சேவைகள் நிறுவப்படும். அவர்களை பராமரிப்பது அரசாங்கத்தின் சமூகப் பொறுப்பாகும்.

## ஊனமுற்ற சமுதாயத்தினர்

ஊனமுற்ற ஆட்களுக்கு ஏனைய பிரசைகளுக்கு உரித்தான வாய்ப்புகள், சிறப்புரிமைகள் மற்றும் உரிமைகளை சமமாக அனுபவிப்பதற்குள்ள உரிமையை ஏற்றுக்கொண்டு சுகாதாரம், கல்வி மற்றும் போக்குவரத்து போன்ற சேவைகளை வழங்குகையில் அவர்களின் தனித்துவமான தேவைகளுக்காக சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.

# அரசியல் மறுசீரமைப்பு

அரசு சனநாயகமயப்படுத்தப்படாமை இலங்கை எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினையாகும். எனவே சனநாயகமும் மக்களின் இறைமையும் உறுதிசெய்யப்பட்ட சாதகமான ஆட்சிக்காக பின்வரும் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும்.

- ☐ **தனி ஆளொருவரிடம் தான்தோன்றித்தனமாக அதிகாரம் குவிக்கப்பட்ட நிறைவேற்று சனாதிபதி முறைக்குப் பதிலாக பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுகின்ற அமைச்சரவையைக்கொண்ட பலம்பொருந்திய பாராளுமன்றமொன்று**
- ☐ **அரசினதும் ஆயுதப் படைகளினதும் பிரதானியாக பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்படுகின்ற சனாதிபதியொருவர்**
- ☐ **சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை கட்டுப்பாடு மற்றும் சமநிலை கோட்பாட்டினை அடிப்படையாகக்கொண்டு பேணி வரப்படுகின்ற பிரதமரை முதன்மையாகக்கொண்ட அமைச்சரவை அரசியல் முறையொன்று**

நெருக்கடியை வெல்வதற்கான
துரித அணுகுமுறை

# மக்கள் பிரதிநிதி

- ☐ **சனாதிபதிக்கும் பிரதமருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள விசேட சிறப்புரிமைகளை இல்லாதொழித்தல்**
- ☐ **மக்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்படுகின்றவர்களின் சொத்துக்கள் மற்றும் தகைமைகள் பற்றிய தகவல்களை அணுக பிரசை கொண்டுள்ள உரிமையையும் போலியான தகவல்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்க பிரசை கொண்டுள்ள உரிமையையும் உறுதிசெய்தல்**
- ☐ **மக்கள் பிரதிநிதிகளை மீள அழைப்பிப்பதற்கான அதிகாரம்**
- ☐ **பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பொது வாகன ஒதுக்கமொன்று**

***சனாதிபதிக்கும் பிரதமருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள விசேட சிறப்புரிமைகளை***

# இலங்கை இனம்

- ☐ சனநாயகம், சமத்துவ பிரதிநிதித்துவம் மற்றும் பங்கேற்பின் அடிப்படையில் நாட்டின் அனைத்து இனத்துவங்களினதும் தேசிய அடையாளம் உறுதிசெய்யப்படுகின்ற அரசியல் மற்றும் நிருவாகரீதியான அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்ட புதிய முறையியலொன்றுடனான நிருவாகக் கட்டமைப்பினை அறிமுகஞ்செய்ய நடவடிக்கை எடுத்தலும் அதுவரை மாகாண சபைகளை ஒழுங்கமைந்த மற்றும் வினைத்திறன்கொண்ட நிறுவனமாக மாற்றுதலும்.
- ☐ தேசீயம், மதம், சாதி, தாய்மொழி, ஆண்-பெண் சமூகநிலை, பால்நிலையை அடிப்படையாகக்கொண்டு எந்தவோர் ஆளும் சமூகக்குழுவும் அவமதிப்பிற்கு சிரமத்திற்கு அல்லது பாரபட்சம் காட்டப்படுதலுக்கு தடுப்பதற்கான நீதித்துறை தத்துவத்தைக்கொண்ட பாரபட்சங்களை தடுப்பதற்கான ஆணைக்குழுவொன்று.
- ☐ பல்வேறு மக்கட் குழுக்களின் கலாசார வித்தியாசங்களை ஏற்றுக்கொண்டு அவற்றை பேணிவர, பாதுகாக்க மற்றும் அந்தக் கலாசார பன்வகைமையின் மத்தியில் சகவாழ்வினை வளர்த்தெடுப்பதற்கான நடவடிக்கைகள்.

# பெருமைமிக்க சுயாதீனமான தேசமொன்று

- ☐ உலக புவி அரசியலினதும் பிராந்திய அதிகாரச் சமநிலையினதும் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு இடையூறு ஏற்படாதவண்ணம் உலக அரசியலில் எந்தவொரு பாசறைக்கும் பக்கச்சார்பற்ற அணிசேரா வெளியுறவுக் கொள்கையொன்று
- ☐ உலகளாவியரீதியிலும் உள்ளூர்ரீதியாகவும் தோன்றுகின்ற சமூக பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்காக பரஸ்பர நன்மதிப்பையும் சகவாழ்வையும் பாதுகாத்துக்கொண்டு செயலாற்ற சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களுடன் ஒத்துழைப்பினை பேணிவருதல்

நெருக்கடியை வெல்வதற்கான
துரித அணுகுமுறை

பல்வேறு மக்கட் குழுக்களின் கலாசார வித்தியாசங்களை ஏற்றுக்கொண்டு அவற்றை பேணிவர, பாதுகாக்க மற்றும் அந்தக் கலாசார பன்வகைமையின் மத்தியில் சகவாழ்வினை வளர்த்தெடுப்பதற்கான நடவடிக்கைகள்

## தேசிய பாதுகாப்பு

நட்புமிக்க வெளியுறவுக் கொள்கையொன்றைக் கடைப்பிடித்து எந்தவொரு அதிகாரப் பாசறைக்கும் முற்சாய்வற்ற கொள்கையை கடைப்பிடிக்கின்றமை மற்றும் இனங்களினதும் மதங்களைச் சேர்ந்தவர்களினதும் நியாயமான வேண்டுகோள்களுக்கு செவிசாய்த்து அவற்றை ஈடேற்றுவதன் மூலமாகவே தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது.

- ☐ **பிரசைகளின் சுதந்திரமும் உயிர்ப்பாதுகாப்பும், தன்னாதிக்கம், ஆள்புல ஒருமைப்பாடு, சுயாதிபத்தியம் மற்றும் அபிமானத்தைப் பாதுகாக்கின்ற பொறியமைப்பொன்றை அமுலாக்குதல்.**
- ☐ **அரச பாதுகாப்பிற்கு எதிராக இடம்பெறுகின்ற உள்ளக யுத்தரீதியான, அரசியல்ரீதியான, பொருளாதாரரீதியான, கலாசாரரீதியான, அச்சுறுத்தல்களுக்கும் சர்வதேசரீதியான அழுத்தங்களுக்கும் எதிர்கொள்வதற்காகவும் அவற்றை வெற்றிகொள்வதற்காகவும் அவசியமான இராஜதந்திர பொறியமைப்பினையும் முரண்பாட்டுத் தீர்வு செயற்பாங்கினையும் இடையறாமல் பேணிவருதல்.**
- ☐ **இயற்கை அனர்த்தங்கள், பெருந்தொற்று நோய்கள் மற்றும் பஞ்சம் போன்றே கைத்தொழில் மற்றும் சுற்றாடல் மாசுபாடு காரணமாக மக்களின் பாதுகாப்பிற்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களை நேரகாலத்துடன் இனங்காணல், அவற்றை தடுப்பதற்கான பொறிமுறைகளை தாபித்தல் மற்றும் அத்தகைய சந்தர்ப்பங்களில் பிரசையின் குடியியல் உரிமைகளைப் பாதுகாத்தல்.**
- ☐ **பல்வேறு இனக்குழுக்களுக்கிடையில் மதம்சார்ந்த மற்றும் கலாசாரம்சார்ந்த மோதல்களை தடுத்தலும் மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதன் ஊடாக உள்ளக சகவாழ்வு பற்றிய உறுதிநிலையை உறுதிப்படுத்துதல்.**
- ☐ **தொழில்நுட்ப அச்சுறுத்தல்களிலிருந்து தேசிய பாதுகாப்பிற்கு ஏற்படுகின்ற தாக்கத்தை தடுத்தல், சைபர் பாதுகாப்பினை விரிவாக்குதல் மற்றும் தொழில்நுட்ப விபத்துகளை தடுத்தல்.**



**பிரசைகளின் சுதந்திரமும் உயிர்ப்பாதுகாப்பும், தன்னாதிக்கம், ஆள்புல ஒருமைப்பாடு, சுயாதிபத்தியம் மற்றும் அபிமானத்தைப் பாதுகாக்கின்ற பொறியமைப்பொன்றை அமுலாக்குதல்**

# நீதித்துறை

பொதுமக்களுக்கு எந்தவிதமான மட்டுப்பாடுகளுமின்றி நீதியை ஈடேற்றிக்கொள்ளும் செயற்பாங்கில் பிரவேசிப்பதற்கான இயலுமை நிலவுகின்ற மற்றும் மக்களுக்கு நெருக்கமான, வினைத்திறன்கொண்ட மற்றும் தரமான நீதித்துறை சேவையை உருவாக்குதல் எமது நோக்கமாகும்.

- ☐ **நீதித்துறை அலுவல்களில் அரசியல் தலையீடு இன்றி பேணிவரவும் நியமனங்களும் பதவியுயர்வு வழங்குதலும் திறமை மற்றும் தகைமையடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்படவும் வாய்ப்பு கிடைக்கத்தக்கவகையில் நிகழ்கால நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினை சுயாதீனமானதும் பலம்பொருந்தியதாகவும் தாபித்தல்.**
- ☐ **அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் நாட்டின் எந்தவொரு பிரசைக்கும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யக்கூடியவகையில் அதன் அலுவல்கள் பன்முகப்படுத்தப்படுவதோடு அதற்க அவசியமான சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பு இலவசமாக வழங்கப்படுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.**



பின்வாங்க இதைவிட ஓர் அங்குலமோ அல்லது பொறுமையுடன் இருக்க இதைவிட ஒரு தருணமோ எமக்கு எஞ்சியதாக இல்லை. தொடர்ந்தும் இதே பாதையில் பயணிப்பதால் ஆபத்தில் தள்ளப்படுவது உங்களினதும் எனதும் உயிர்கள் மாத்திரமன்றி எமது பிள்ளைகளை உள்ளிட்ட பல வருங்காலச் சந்ததிகளின் தலைவிதியாகும். இத்தருணத்தில் எமது மனச்சாட்சியைத் தட்டியெழுப்பி நாங்கள் கேட்க வேண்டியது, இந்த துர்ப்பாக்கியமான தலைவிதியை எதிர்கால தலைமுறையினருக்கு அனுபவிக்க இடமளிக்காமல் அதனை மாற்றியமைப்பதற்காக இந்த தவறான சமூக, பொருளாதார கொள்கைகளின் ஆழத்துடன் விரிவான மாற்றமொன்றுக்காக நாங்கள் தோற்றவேண்டுமென்பதும் அந்த மாற்றத்தை அடையக்கூடிய அரசியல் இயக்கமொன்றுடன் ஒன்றிணைய வேண்டுமென்பதையல்லவா?

தேசிய மக்கள் சக்தி என்றவகையில் அந்த ஆழமானதும் விரிவானதுமான சமூக பொருளாதார மாற்றத்தை அடைவதற்கு அவசியமான அத்திவாரத்திற்கான அடிப்படை கருத்துக்களையும் துரித முன்மொழிவுகள் சிலவற்றையும் முன்வைக்கிறோம். அந்த முன்மொழிவுகளை மேலும் விரிவாக்கி அவற்றை யதார்த்தமாக்கிக் கொள்வதற்காக எம்மோடு கைகோர்த்துக் கொள்ளுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

**தேசிய மக்கள் சக்தி**

www.npp.lk
nppsrilanka@gmail.com
www.youtube.com/c/NPPSRILANKA